உ

# அருள்மிகு
# சுப்பிரமணிய சுவாமி
# திருக்கோயில்

திருச்செந்தூர் - 628 215.
தூத்துக்குடி மாவட்டம்



**1193-1194 விளம்பி வருடம் - சித்திரை–பங்குனி வரை 14.04.2018 - 13.04.2019 வரை**

**பூசை காலங்கள், மாதாந்திர, வருடாந்திர விழாக்கள், விழாக்காலங்கள் மற்றும் திருக்கோயிலைப் பற்றிய பொது விவரங்கள்**

**(இலவச வெளியீடு)**

உ

முருகன் துணை

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

## திருச்செந்தூர் - 628 215.

**அறுபடை வீடுகளில் இரண்டாம்படை வீடாகத் திகழும் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி** திருக்கோயிலில் நித்தியப்படி நடக்கும் கால பூஜைகள், மாதாந்திர விசேடங்கள், ஆண்டுத் திருவிழாக்கள் ஆகிய விவரங்களை புத்தகமாக அச்சிட்டு பக்தர்களின் தகவலுக்காக வழங்க வேண்டுமென்ற பக்த பிரமுகர்களின் கோரிக்கைக்கு இணங்க இப்புத்தகம் வெளியிடப்படுகிறது. இதற்கு முன்னர் இதே விவரங்கள் நாட்குறிப்பு என்ற பெயரில் பெரிய அளவில் வெளியிடப்பட்டு அதிக விலைக்கு விற்கப்பட்டது. தேவையான விவரங்களை அச்சிட்டு கொடுத்தால் பெருவாரியாக பக்தர்கள் பயனடைவார்கள் என்ற கருத்தில் இப்புத்தகம் வெளியிடப்படுகிறது.

## தலச்சிறப்பு:

நீலத்திரைக்கடல் ஓரம் அமைந்துள்ள திருச்செந்திலம்பதியில் வேண்டுவோர்க்கு வேண்டுவன வேண்டியபடி வழங்கி வருகிறார் செந்தமிழ்க் கடவுளாம் **திருச்செந்திலாண்டவன்!** தமிழகத்தில் மிகவும் பிரசித்திபெற்ற திருக்கோயில்களுள் இதுவும் ஒன்றாகும். முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் **இரண்டாவது படைவீடான** இப்பதி ‘‘**செந்திலம்பதி**’’ ‘‘**திருச்சீரலைவாய்**’’ ‘‘**செந்தில் மாநகர்**’ ‘‘**ஜெயந்திபுரம்**’’ எனப் பல பெயர்களில் போற்றப்படுகிறது. பழம்பெரும் நூல்களான அகநானூறு, புறநானூறு, மற்றும் திருமுருகாற்றுப்படை போன்ற நூல்களில் இச்செந்திலம்பதி இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே இத்திருக்கோயில் நிலைபெற்று இருப்பதாக வரலாற்று வாயிலாக அறிகிறோம்.

**முருகப்பெருமான் சூரபத்மனை வென்று வெற்றிவாகை சூடி, சிவபெருமானை வழிபட்ட புண்ணியத்தலம்** இதுவாகும். அவ்வெற்றி விழாவினை இங்கே ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி திருவிழாவாகக் கொண்டாடுவது கண்கொள்ளாக்காட்சியாகும்!

அலைவாய் கரையருகே இன்றைக்கு சற்றேறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட 137 அடி உயரமும் 90 அடி அகலமும் உள்ள **கோபுரம் கம்பீரமாகக்** காட்சியளிப்பது இப்பகுதியின் சிறப்பாகும். இதனை **ஸ்ரீ தேசிக மூர்த்தி சுவாமிகள்** என்னும் சைவத் துறவி அரும்பாடுபட்டு உருவாக்கினார். இத்திருக்கோயிலின் கருங்கற்திருப்பணி செய்து முடித்த பெருமை **மௌன சுவாமிகள், காசி சுவாமிகள், ஆறுமுக சுவாமிகள்** மற்றும் **வள்ளிநாயக சுவாமிகள்** ஆகியோரையே சாரும்.

இத்திருக்கோவில் மதுரைக்கு தெற்கே 170 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருநெல்வேலியிலிருந்து சுமார் 60 கி.மீ. கிழக்கே அமைந்துள்ளது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் திருச்செந்தூர் வருவதற்கு சாலை வசதிகளும், பேருந்து வழித்தடங்களும், இரயில் வசதிகளும் உள்ளன. தூத்துக்குடியிலிருந்து தெற்கே 40 கி.மீ தூரத்தில் உள்ளது.

அகத்தியர், அப்பர்சுவாமிகள், அருணகிரிநாதர், ஆதிசங்கரர், பகழிக்கூத்தர், குமரகுருபரர் ஆகியோர் ஆண்டவன் அருள்பெற்ற தொன்மையான தலமும் இதுவே! ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் இத்தலத்தில் **சுப்பிரமணிய புஜங்க தோத்திரம்** அருளிச் செய்து கடுமையான நோய் நீங்கப் பெற்றார். பிறவியிலேயே ஊமையாக இருந்த குமரகுருபரர் ஐந்து வயதுப் பருவத்தில் முருகனருளால் பாடும் திறன் பெற்று கந்தர்கலிவெண்பா பாடியருளினார். பகழிக்கூத்தர் எனும் வைணவப் பெருமகன் குமரன் அருளால் வயிற்றுவலி தீர்ந்து **திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்** இயற்றிப் புகழ்பரப்பினார்.

திருச்செந்தூர் வட்டம் காலங்குடியிருப்பு எனும் சிற்றூரில் வசித்த **மீராக்கண்ணுப் புலவர் என்னும் முகமதியப் பெரியவர்** பட்ட கடனைச் செந்திலாண்டவன் தீர்த்தார். அண்மையில் கே.எஸ்.டி. மூர்த்தியின் பெண்குழந்தை ஒன்று வாய் பேசாத்தன்மை நீங்கியதும், அருப்புக்கோட்டை செட்டியார் வகுப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு இரு கைகளும் கால்களும் ஊனம் நீங்கியதும் இத்தலத்திலுள்ள திருமுருகன் அருளாலேதான்!

## திருக்கோயில் தினசரி வழிபாட்டுக் காலங்கள்

இத்திருக்கோயிலில் **ஒன்பது கால பூசைகள் நடைபெறுவது சிறப்பாகும்.** இத்திருக்கோயிலில் கீழ்க்கண்டவாறு நித்தியப்படி பூசைகள் நடைபெற்று வருகின்றன.

அதிகாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை தொடர்ந்து திருக்கோயில் நடைதிறந்து இருக்கும். (மார்கழி மாதம் மற்றும் விசேஷட நாட்களில் பூஜை காலங்கள் மாறுதலுக்குட்பட்டது.

அதிகாலை 5.00 மணி முதல் இரவு 9-00 மணிவரை தொடர்ந்து திருக்கோயில் நடை திறந்து இருக்கும்.

| வேளை | மணி | பூசை விவரம் |
|---|---|---|
| காலை | 5.10 | சுப்ரபாதம் - திருப்பள்ளி எழுச்சி |
| ” | 5.30 | விசுவரூப தரிசனம் |
| ” | 5.45 | துவஜஸ்தம்பம் (கொடிமர) நமஸ்காரம் |
| ” | 6.15 | உதயமார்த்தாண்ட அபிஷேகம் |
| ” | 7.00 | உதயமார்த்தாண்ட தீபாராதனை (1-வது கால பூஜை) |
| ” | 8.00 - 8.30 | காலசந்தி பூஜை (2,3,4-வது கால பூஜைகள்) |
| ” | 10.00 | கலச பூசை |
| ” | 10.30 | உச்சிகால அபிசேகம் |
| பகல் | 12.00 | உச்சிகால தீபாராதனை (5-வது கால பூஜை) |
| மாலை | 5.00 | சாயரட்சை பூசை (6-வது கால பூஜை) |
| இரவு | 7.15 | அர்த்தசாம அபிசேகம் |
| ” | 8.15 | அர்த்தசாம பூசை (7-வது கால பூஜை) |
| ” | 8.30 | ஏகாந்த சேவை (8-வது கால பூஜை) |
| ” | 8.45 | இரகசிய தீபாராதனை, பள்ளியறை பூசை (9-வது கால பூஜை) |
| ” | 9.00 | நடைதிருக்காப்பிடல் |

மூலவரான பாலசுப்பிரமணியர் சன்னதி, கரியமாணிக்க விநாயகர், வள்ளி மற்றும் தெய்வானை சன்னதிகளுக்குப் போத்திமார்களாலும், சண்முகர் மற்றும் நடராஜர் சன்னதிகளில் ஆதி சைவ சிவாச்சாரியார்களாலும் பூசை செய்யப்படுகிறது.

## மாத சிறப்பு வழிபாட்டு விவரங்கள்

1. மாதப்பிறப்பு சிறப்பு வழிபாடு
2. சஷ்டி தோறும் சிறப்பு வழிபாடு
3. கார்த்திகையன்று **ஜெயந்திநாதர் சிறப்பு அபிசேகம்** மாலை திருவிளக்கு பூசை. இரவு தங்கரத புறப்பாடு.
4. ஒவ்வொரு மாத விசாக தினத்தன்றும் **சண்முகப் பெருமானுக்கு** சிறப்பு அபிசேகம் மற்றும் தீபாராதனை.
5. மாதாந்திர **(தமிழ் மாதக்கடைசி வெள்ளி)** சிறப்பு வழிபாடு. **கிரிபிரகார சுவாமி புறப்பாடு.**
6. சித்திரை முதல்நாள் (விசு புண்ணியகாலம்) **அன்னாபிசேகம்** மற்றும் சிறப்பு வழிபாடு.
7. புரட்டாசி மாதம் ஒன்பது நாட்கள் **நவராத்திரி விழா**
8. ஐப்பசி மாத முதல்நாள் **அன்னாபிசேகம், விசுபுண்ணியகாலம்** சிறப்பு வழிபாடு
9. பங்குனி உத்திரம் - **வள்ளி திருக்கல்யாணம்**

## ஆண்டு திருவிழாக்கள் விவரங்கள்

1. வைகாசி மாதம் - **வைகாசி விசாகம். சிறப்பு வழிபாடு மற்றும் சுவாமி புறப்பாடு**
2. ஆவணி மாதம் - **ஆவணிப் பெருந்திருவிழா** *12* **நாட்கள்**
3. ஐப்பசி மாதம் - இலட்சக்கணக்கானோர் கலந்துகொள்ளும் 6 நாட்கள் **ஸ்கந்த சஷ்டி திருவிழா-சூரசம்காரம்** மற்றும் **தெய்வானை திருக்கல்யாணம்**
4. மாசி மாதம் - **மாசிப் பெருந்திருவிழா 12 நாட்கள்**

ஆவணி மற்றும் மாசிப் பெருந்திருவிழா நாட்களில்

7ஆம் நாளன்று ஸ்ரீ சண்முகப்பெருமான் சிவப்பு சாத்தி சிறப்பு எழுந்தருளல்

8ஆம் நாளன்று ஸ்ரீ சண்முகப்பெருமான் பச்சை சாத்தி சிறப்பு எழுந்தருளல்

10ஆம் நாளன்று திருத்தேர்

11ஆம் நாளன்று தெப்பம் ( மாசி திருவிழாவில் மட்டும்)

## சிறப்பு கட்டளைகள் (நிரந்தர வைப்புநிதி கட்டளைகள்)

பக்தர்கள் கீழ்க்காணும் கட்டளைகள் நடத்துவதற்கு குறிப்பிடப்பட்ட தொகையை முதலீடு செய்து திருவருள் பெறலாம்.

பக்தர்கள் விரும்பும் நாளில் அவர்களின் பெயரில் தொடர்ந்து பூசைகள் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | உதயமார்த்தாண்டக் கட்டளை | ரூ. 1,500/- |
| 2. | நித்தியப்படி புஷ்பக்கட்டளை | ரூ. 1,000/- |
| 3. | தங்கரதப் புறப்பாடு கட்டளை | ரூ. 35,000/- |
| 4. | சண்முகார்ச்சனைக் கட்டளை | ரூ. 25,000/- |
| 5. | நித்தியப்படி ஒன்பது காலபூசை கட்டளை | ரூ. 10,000/- |
| 6. | தினசரி பிரசாதக்கட்டளை (புளியோதரை) | ரூ. 15,000/- |
| 7. | அன்னதானக் கட்டளை, அ/மி. சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், ( 400 நபர்களுக்கு) நிரந்தர முதலீடு | ரூ. 1,75,000/- |
| 8. | அன்னதானக் கட்டளை அ/மி சிவக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயில் (100 நபர்களுக்கு (நிரந்தர முதலீடு) | ரூ. 45,000/- |
| 9 | அன்னதானக் கட்டளை அ/மி. வெங்கடாசலபதி திருக்கோவில், கிருஷ்ணாபுரம் ( 50 நபர்கள்) (நிரந்தர முதலீடு) | ரூ. 25,000/- |
| 10. | அன்னதானக் கட்டளை அ/மி சக்திவிநாயகர் திருக்கோயில் நாசரேத் ( 50 நபர்கள்) (நிரந்தர முதலீடு) | ரூ. 25,000/- |
| 11. | அன்னதானக் கட்டளை அ/மி காஞ்சி விஜயகச்சிக்கொண்ட பாண்டீசுவரர் திருக்கோயில் குலசேகரன் பட்டிணம் (50 நபர்கள்) (நிரந்தர முதலீடு) | ரூ. 25,000/- |

## உபகோயில்கள்

கீழ்க்கண்ட உபகோயில்கள் இத்திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகின்றன.

1. அருள்மிகு சிவக்கொழுந்தீசுவரர் திருக்கோயில், திருச்செந்தூர்.
2. ” வெயிலுகந்தம்மன் திருக்கோயில், திருச்செந்தூர்.
3. ” அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயில், திருச்செந்தூர்.
4. ” உச்சினிமாகாளியம்மன் திருக்கோயில், திருச்செந்தூர்.
5. ” வள்ளிக்குகைத் திருக்கோயில் (குகை வள்ளியம்மன்) திருச்செந்தூர்.
6. ” வள்ளிநாயக சுவாமி சமாதி, திருச்செந்தூர்.
7. ” மூவர்சமாதி (மௌன சுவாமி, காசி சுவாமி, ஆறுமுகசுவாமி) திருச்செந்தூர்.
8. ” தூண்டுகை விநாயகர் திருக்கோயில் திருச்செந்தூர்
9 ” வெங்கடாசலபதி சுவாமி திருக்கோயில், கிருஷ்ணாபுரம்.
10 ” சித்தி விநாயகர் திருக்கோயில், இடிந்தகரை.
11. ” பிரணவேசுவரர் திருக்கோயில், ஓமநல்லூர்.
12. ” பிரசன்ன சக்தி விநாயகர் திருக்கோயில், சுப்பிரமணியபுரம்.
13. ” ஐக்கிய விநாயகர் திருக்கோயில், காயாமொழி.
14. ” குன்றுமேலய்யன் சாஸ்தா திருக்கோயில், நாலுமூலைக்கிணறு.
15. ” சக்தி விநாயகர் திருக்கோயில், நாசரேத்.
16. ” காஞ்சி விசயகச்சிக்கொண்ட பாண்டீசுவரர் திருக்கோயில், குலசேகரன் பட்டினம்.
17. ” கணபதீஸ்வரர் திருக்கோயில், காயல்பட்டிணம்

## திருக்கோயிலின் சார்பு நிலையங்கள்

1. அன்பு இல்லம் - திருச்செந்தூர்
2. சித்த வைத்தியசாலை - திருச்செந்தூர்
3. நூல்நிலையம் - திருச்செந்தூர்

## பக்தர்களுக்காக செய்யப்பட்டுள்ள வசதிகள்

1. இத்திருக்கோயிலில் **பன்னீர் இலை விபூதி** மற்றும் விபூதி பாக்கெட் பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.
2. இத்திருக்கோயிலில் அனைவருக்கும் நற் சந்தனம் வழங்கப்பட்டு வருகிறது.
3. இத்திருக்கோவிலில் பக்தர்கள் வசதியாக திருக்கோயிலினுள் சென்று வழிபடுவதற்கு **முறை வரிசைக்கம்பி வழி [கியூ]** அமைக்கப்பட்டுள்ளது.
4. பக்தர்கள் தங்களது பொருள்களை பாதுகாப்பாக வைத்துவிட்டு சென்று வருவதற்கு **பொருட்கள் பாதுகாப்பு அறை வசதி** செய்து தரப்பட்டுள்ளது.
5. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையன்று மாணவ - மாணவிகளுக்கு ஆன்மீகக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.
6. மாண்புமிகு. **தமிழக முதலமைச்சரின்** (நன்கொடையாளர்/திட்டநிதி மூலம்) அன்னதானத் திட்டத்தின் கீழ் தினசரி 400 நபர்களுக்கு **அன்னதானம்** வழங்கப்பட்டு வருகிறது.
7. பக்தர்களின் வசதிக்காக இலவச கழிப்பிட வசதி, குளியலறை வசதி செய்யப்பட்டுள்ளன.
8. பக்தர்களின் வசதிக்காக இலவச காலணி பாதுகாப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திருக்கோயிலில் கீழ்காணும் சேவைகள் இணையதளம் மூலம் பக்தர்கள் முன்பதிவு செய்திட வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

(திருவிழா காலங்கள் மற்றும் இதர விசேஷ நாட்கள் நீங்களாக)

**❖ Online Donation ❖ Online Accommodation ❖ Online Abishekam**

**❖ Online Golden Chariot ❖ Online Shanmugar Archanai**

**❖ Online Annadhanam**

இத்திருக்கோயில் பற்றிய விவரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய

இணையதளம் : **www.tiruchendurmurugantemple.tnhrce.in**

மின் அஞ்சல் : **tiruchendurmurugan@tnhrce.com**

## அன்னதானத் திட்டம்

"தானத்தில் சிறந்தது அன்னதானம்" என்ற முதுமொழிக்கேற்ப, மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்களால் 23.2.2002-இல் துவக்கி வைக்கப்பட்ட நித்திய அன்னதானத் திட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் உபகோயில்களான திருச்செந்தூர் அருள்மிகு சிவக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயில், நாசரேத் அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில், குலசேகரன்பட்டிணம் அருள்மிகு காஞ்சி விஜய கச்சிக்கொண்ட பாண்டீசுவரர் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம், கிருஷ்ணாபுரம், அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில் ஆகியவற்றில் பின்வரும் விவரப்படி நடைபெற்று வருகின்றது. தங்கள் பிறந்த நாள் / திருமண நாள் / தாங்கள் விரும்பும் நாள் மற்றும் குழந்தைகள் பிறந்த நாளில் அன்னதானம் செய்வீர்.

**அன்னதான நன்கொடைகளுக்கு சட்டப்பிரிவு 80(G)ன் படி வருமான வரி விலக்கு உண்டு.**

| திருக்கோயில் பெயர் | நாள்1-க்கு | நிரந்தர வைப்பு நிதித் திட்டம் |
|---|---|---|
| அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், (400 நபர்கள்) | ரூ. 12,000/- | ரூ.1,75,000/- |
| அருள்மிகு சிவக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயில், திருச்செந்தூர், (100 நபர்கள்) | ரூ. 3,000/- | ரூ. 45,000/- |
| அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், கிருஷ்ணாபுரம், (50 நபர்கள்) | ரூ. 1500/- | ரூ. 25,000/- |
| அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில், நாசரேத், (50 நபர்கள்) | ரூ. 1500/- | ரூ. 25,000/- |
| அருள்மிகு காஞ்சி விஜயகச்சிக்கொண்ட பாண்டீசுவரர் திருக்கோயில், குலசேகரன்பட்டிணம், (50 நபர்கள்) | ரூ. 1500/- | ரூ. 25,000/- |

*'சர்வ சக்தி படைத்த இறைவனே!*
*வியர்வை கொட்ட உழைக்கும் சக்தியை என் மக்களுக்கு வழங்கு!*
*அவர்களுடைய அயராத கடும் உழைப்பில் தீமையை*
*வேரறுக்கக் கூடிய மேலும் பல அக்கினிகள் உருவாகட்டும்!*
*எனது தேசத்தில் அமைதி பூத்துக் குலுங்கட்டும்*
*எனது மக்கள் நல்லிணக்கத்தோடு வாழட்டும்.*

*நான் இந்த மண்ணிலே மடிந்து மண்ணோடு மண்ணாகி விட வேண்டும்.*
*இந்த மண்ணின் மகத்துவத்தைக் கொண்டாடிக் குதூகலிப்பதற்காக மறுபடியும் இதே மண்ணில் நான் பிறப்பதற்கு அருள்புரிவாயாக!*

*– மேதகு முன்னாள் குடியரசுத்தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின்*
*– "எழுச்சி தீபங்கள்" என்ற நூலிலிருந்து.*

## தங்கும் விடுதிகள் விபரம்

திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் வசதிக்காக கீழ்க்கண்டபடி குறைந்த வாடகையில் அறைகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | செந்திலாண்டவன் விடுதி | 80 அறைகள் |
| 2. | வேலவன் விடுதி | 73 அறைகள் |
| 3. | ஜெயந்தி நாதர் விடுதி, ஹால் 1 | 110 அறைகள் |
| 4. | செந்தூரர் முருகன் விடுதி<br>(திருக்கோயில் பேருந்து நிலையம் அருகில்) | 24 அறைகள் |
| 5. | கந்தன் விடுதி (குளிர்சாதன வசதிகளுடன்) | 14 அறைகள் |
| 6. | ஆறுமுக விலாஸ் குடில் (குளிர்சாதன வசதிகளுடன்) | 12 குடில்கள் |
| 7. | சிறு குடில்கள் (குளிர்சாதன வசதிகளுடன்)<br>27பி1, பி2, 11, 11ஏ, 12, 12ஏ | 6 குடில்கள் |
| 8. | ஆறுமுக விலாஸ் குடில்கள் (குளிர்சாதன வசதியின்றி) | 2 குடில்கள் |
| 9. | சிறப்புக் குடில் (குளிர்சாதன வசதியின்றி) | 8 குடில்கள் |
| 10. | ராம்கோ குடில் 7ஏ, 8ஏ (குளிர்சாதன வசதியின்றி) | 2 குடில்கள் |
| 11. | பாதி நன்கொடைத்திட்டத்தின் கீழ்க்<br>கட்டப்பட்டுள்ள சிறு குடில்கள் (குளிர்சாதன வசதியின்றி) | 59 குடில்கள் |
| 12. | கந்தசஷ்டி விரத மண்டபம் பெட்டக<br>(லாக்கர்) வசதியுடன் | 73 பெட்டகங்கள் |
| 13. | திருமண மண்டபம் | 1 |
| 14. | சாமான்கள் பாதுகாப்பு அறை (கிளாக் ரூம்) | 1 |
| 15. | பெண்கள் சஷ்டி விரத மண்டபம் | 1 |
| 16. | செந்திலாண்டவன் விடுதி பெட்டக வசதி (லாக்கர்) | 50 எண்ணம் |
| 17. | நவீன சஷ்டி மண்டபம் மேல்தளம் | 2 எண்ணம் |
| 18. | நவீன சஷ்டி மண்டபம் கீழ்தளம் | 1 எண்ணம் |
| 19. | தேவர் குடில் | 2 எண்ணம் |
| 20. | விருந்தினர் மாளிகை | 6 எண்ணம் |
| 21. | காவடி மண்டபம் இலவச அனுமதி | |
| | | |

## தங்கும் விடுதிகள் வாடகை விபரம்

| வ. எண் | விபரம் | நாள் ஒன்றுக்கு வாடகை ரூ. |
|---|---|---|
| 1. | தெய்வானை இல்லம் (சாமான்கள் பாதுகாப்பு அறை பொருள் ஒன்றுக்கு) | 10/- |
| 2. | சஷ்டி விரத மண்டபம் (நபர் ஒன்றுக்கு) | 10/- |
| 3. | செந்திலாண்டவர் விடுதியில் லாக்கர் வசதியுடன் ஹால்(நபர் ஒன்றிற்கு) | 10/- |
| 4. | நவீன சஷ்டி விரத மண்டபம் லாக்கர் வசதியுடன் (நபர் ஒன்றிற்கு) | 20/- |
| 5. | செந்திலாண்டவர் விடுதி, வேலவன் விடுதி | |
| | 'ஏ' வகுப்பு அறை | 300/- |
| | 'பி' வகுப்பு அறை | 200/- |
| | 'சி' வகுப்பு அறை | 100/- |
| 6. | ஜெயந்தி நாதர் விடுதி | |
| | 'ஏ' வகுப்பு அறை | 300/- |
| | 'பி' வகுப்பு அறை | 200/- |
| 7. | செந்தூர்முருகன் விடுதி (அறை ஒன்றுக்கு) குளிர்சாதன வகதியுடன் | 800/- |
| 8. | சிறு குடில்கள் | 500/- |
| 9. | ஆறுமுக விலாஸ் குடில்கள், 7 மற்றும் 8 | 500/- |
| 10. | ராம்கோ குடில்கள் 7ஏ - 8ஏ | 1000/- |
| 11. | ஆறுமுக விலாஸ் விடுதி மாடி (சிறப்புக் குடில்) 1 ஏ முதல் 6 ஏ - 9ஏ முதல் 10 ஏ | 1000/- |
| 12. | ஆறுமுக விலாஸ் விடுதி கீழ்பகுதி 1 - 6 | 1000/- |
| | குளிர்சாதன வசதி 1B - 6B, 27பி1, 27பி2 | 1000/- |
| 13. | சிறுகுடில்கள் குளிர்சாதன வசதிகளுடன் | |
| | 11, 11ஏ,12 12ஏ | 1500/- |
| 14. | ஜெயந்திநாதர் விடுதி ஹால் | 800/- |
| 15. | பெண்கள் சஷ்டி விரத மண்டபம் | 3050/- |
| 16. | சஷ்டிவிரத மண்டபம் (இடும்பன் கோவில்) | 4050/- |
| 17. | கலையரங்கம் (கல்யாண வகைக்கு) | 5050/- |
| 18. | திருமண மண்டபம் | 5050/- |
| 19. | நவீன சஷ்டி விரத மண்டபம் மேல்தளம் | 2100/- |
| 20. | நவீன சஷ்டி விரத மண்டபம் கீழ்தளம் | 1050/- |

மேற்படி விடுதிகளில் தங்குவதற்கு இணையதளம் மூலம் மட்டுமே முன்பதிவு செய்யவேண்டும். முன் பதிவு நேரம் காலை 8.00 மணி முதல் கணக்கிடப்படும்.

- ❑ திருவிழாக் காலங்களுக்கு இந்தக் கட்டண விகிதங்கள் பொருந்தாது.
- ❑ மேற்காணும் கட்டணங்கள் மாறுதலுக்கு உட்பட்டது.
- ❑ திருமண மண்டபம், கலையரங்கம் முன்பதிவு மாலை 4 மணி முதல் கணக்கிடப்படும்.

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

## உபய சேவை விபரங்கள் பட்டியல்

தினமும் அதிகாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இடைவிடாது தரிசனத்திற்காக திருக்கோயில் நடைதிறந்திருக்கும்

| வ. எண் | உபய சேவை பெயர் | அனுமதிக்கும் நபர்கள் | வழங்கப்படும் பிரசாதங்கள் | நேரம் | நாள் | கட்டணத் தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | சண்முகார்ச்சனை கட்டளை | 9 | எட்டு வகை பிரசாதம் :<br>புளியோதரை, சர்க்கரைப்பொங்கல்,<br>தேங்காய்ச் சாதம், தயிர்ச்சாதம்<br>வெண்பொங்கல், பால்பாயசம்,<br>வடை, புட்டமுது<br>தேங்காய் – 14<br>பழம் – 28 நூல் நேரியல் 1 | காலை<br>8.30 முதல்<br>9.40 வரை<br>மாலை 5.00<br>முதல் 7.00<br>வரை | தினசரி<br>(திருவிழா<br>காலங்கள்<br>நீங்கலாக) | 1,500/– | நிரந்தர வைப்பு நிதி<br>ரூ. 25,000/– |
| 2. | தங்கத்தேர் புறப்பாடு | 6 | சர்க்கரைப்பொங்கல்<br>வெண் பொங்கல்<br>தேங்காய் – 1<br>பழம் – 2<br>லட்டு – 5<br>வெள்ளி டாலர் – 1<br>பிளாஸ்டிக் வாளி – 1<br>நூல் நேரியல் 1 | மாலை<br>6 மணி | தினசரி<br>(திருவிழா<br>காலங்கள்<br>நீங்கலாக) | 2,500/– | நிரந்தர வைப்பு நிதி<br>ரூ. 35,000/– |
| 3. | ஒன்பது கால பூஜை<br>திட்டக் கட்டளை | 3 | 1/4 படி அரிசி<br>சர்க்கரைப்பொங்கல்<br>தேங்காய் – 1<br>பழம் – 2 | ஒன்பது கால<br>பூசை நேரம் | தினசரி | 1,000/– | நிரந்தர வைப்பு நிதி<br>ரூ. 10,000/– |
| 4. | உதயமார்த்தாண்டக் கட்டளை | 3 | தேங்காய் – 1<br>பழம் – 2 | உதய மார்த்தாண்ட<br>தீபாராதனை | தினசரி | --- | நிரந்தர வைப்பு நிதி<br>ரூ. 1,500/– |
| 5. | நித்தியப்படி புஷ்பக் கட்டளை | 3 | தேங்காய் – 1<br>பழம் – 2 | உதய மார்த்தாண்ட<br>தீபாராதனை | தினசரி | --- | நிரந்தர வைப்பு நிதி<br>ரூ. 1,000/– |
| 6. | தினசரி பிரசாதக் கட்டளை<br>புளியோதரை | 5 | புளியோதரை<br>100 பாக்கட் விநியோகம் | மூன்று பூசை<br>காலங்கள் | தினசரி | --- | நிரந்தர வைப்பு நிதி<br>ரூ. 15,000/– |
| 7. | திருக்கோயில் மூலம்<br>அபிஷேகம் | 2 | சந்தனம், பால், பஞ்சாமிர்தம், விபூதி,<br>சந்தனாதிதைலம், தேன், இளநீர், பன்னீர்,<br>நல்லெண்ணெய், மாலை, தேங்காய்–1பழம்–2 | காலை 6.00<br>பகல் 10.30<br>இரவு 7.00 | தினசரி | 1,500/– | -- |

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

## திருக்கோயிலில் தரிசன, அர்ச்சனை, இதர கட்டண விபரங்கள்

| கட்டண சீட்டு விபரம் | | | |
|---|---|---|---|
| 1. | கந்தவேள் சஷ்டிவிரத மண்டபம் பக்தர்கள் தங்குவதற்கு (குளியலறை மற்றும் கழிப்பறை வசதியுடன்) | நபர் 1 க்கு | ரூ. 10/– (பத்து மட்டும்) |
| 2. | நாழிக்கிணறு தீர்த்தமாடவும் பார்க்கவும் கட்டணம் | நபர் 1 க்கு | ரூ. 1/– (ஒன்று மட்டும்) |
| 3. | வள்ளிகுகை தரிசனம் மற்றும் பார்ப்பதற்கு கட்டணம் | நபர் 1 க்கு | ரூ. 1/– (ஒன்று மட்டும்) |
| 4. | சரவணப்பொய்கையை பார்வையிட | நபர் 1 க்கு | ரூ. 1/– (ஒன்று மட்டும்) |
| 5. | மணியடி தரிசனம் சாதாரண நாளில் | நபர் 1 க்கு | ரூ. 10/– (பத்து மட்டும்) |
| 6. | மணியடி தரிசனம் விசேட காலங்களில் மட்டும்) | நபர் 1 க்கு | ரூ. 20/– (இருபது |
| 7. | மணியடி தீபாராதனை பார்க்க சாதாரண நாளில் | நபர் 1 க்கு | ரூ. 10/– (பத்து மட்டும்) |
| 8. | மணியடி தீபாராதனை விசேட நாட்களில் | நபர் 1 க்கு | ரூ. 20/– (இருபது மட்டும்) |
| 9. | அபிசேகம் பார்த்தல் அனுமதி கட்டணம் சாதாரண நாளில் | நபர் 1 க்கு | ரூ. 200/– (இருநூறு மட்டும்) |
| 10. | அபிஷேகம் பார்த்தல் விசேட நாட்களில் | நபர் 1 க்கு | (மாறுதலுக்கு உட்பட்டது) |
| 11. | அர்ச்சனை செய்ய சீட்டு | நபர் 1 க்கு | ரூ. 5/– (ஐந்து மட்டும்) |
| 12. | சகஸ்ரநாம அர்ச்சனை சீட்டு | நபர் 1 க்கு | ரூ. 10/– (பத்து மட்டும்) |
| 13. | தேங்காய் உடைப்பு – தேங்காய் 1 க்கு | | ரூ. 2/– (இரண்டு மட்டும்) |
| 14. | பாதம் வைப்பு கட்டணச் சீட்டு | புத்தகம் 1 க்கு | ரூ. 50/– (ஐம்பது மட்டும்) |
| 15. | முடி காணிக்கை சீட்டு | நபர் 1 க்கு | ரூ. 30/– (முப்பது மட்டும்) |
| 16. | சாமான்கள் பாதுகாப்பு பெட்டி அல்லது பை ஒன்றுக்கு கட்டணம் | நபர் 1 க்கு | ரூ. 10/– (பத்து மட்டும்) |
| 17. | இத்திருக்கோயிலில் மாதம் ஒரு நாள் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்ப வருடம் ஒன்றுக்கு கட்டணம் ரூ. 200/– | நபர் 1 க்கு | ரூ. 200/– (இருநூறு மட்டும்) |
| 18. | மணியடி விரைவு தரிசனம் | நபர் 1 க்கு | ரூ. 100/– (ரூபாய் நூறு மட்டும்) |
| 19. | மணியடி சிறப்பு விரைவு தரிசனம் | நபர் 1க்கு | ரூ. 250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) |
| 20. | பன்னீர் பாட்டில் | 1க்கு | ரூ. 40/– (ரூபாய் நாற்பது மட்டும்) |

**அபிஷேக பொருட்களை சொந்த பொறுப்பில் வாங்கி வருபவர்கள் அபிஷேக இனங்கள் 1க்கு ரூ.20/– கட்டணச்சீட்டு பெற வேண்டும்.**

# திருக்கோயிலில் பார்க்க வேண்டிய இடங்கள்

1. வள்ளிகுகைக் கோவில் 2. தியான மண்டபம் 3.நாழிக்கிணறு
4. மூவர் சமாதி 5. வள்ளி நாயக சுவாமி சமாதி 6. சரவணப் பொய்கை
7. அருள்மிகு சிவக்கொழுந்தீசுவரர் திருக்கோயில், திருச்செந்தூர்
8. அருள்மிகு வெயிலுகந்தம்மன் திருக்கோவில், திருச்செந்தூர்.
9. அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில். சிற்பங்கள், கிருஷ்ணாபுரம்.
10. அருள்மிகு காஞ்சி விஜயகச்சி கொண்ட பாண்டீசுவரர் உடனுறை அருள்தரும் அறம் வளர்த்த நாயகி அம்பாள் திருக்கோயில் குலசேகரன்பட்டினம்.

**மேலும் விபரங்களுக்கு திருக்கோயிலுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்: STD Code: 04639**

| | | |
|---|---|---|
| அலுவலகம் | **242221** | இணை ஆணையர்/செயல் அலுவலர் அலுவலகம் |
| தகவல் நிலையம் | **242271** | குடில்கள், அறைகள், விடுதிகள் பதிவு செய்யுமிடம். |
| திருக்கோயில் | **242270** | பூஜைகள், கட்டளைகள், அர்ச்சனைகள், தங்கரதம் உலா |

இத்திருக்கோயில் பற்றிய விவரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய
இணையதளம் : **www.tiruchendurmurugantemple.tnhrce.in**
மின் அஞ்சல் : **tiruchendurmurugan@tnhrce.com**

திருக்கோயில் மூலம் (பக்தர்கள் விரும்பும் நட்சத்திரங்களில்) **மாதாமாதம் அர்ச்சனை செய்து பிரசாதம்** தபால் மூலம் அனுப்பி வைப்பதற்கு (பதிவு அர்ச்சனை) **வருடம் 1-க்கு ரூ. 200/-** மட்டும் செலுத்தி பக்தர்கள் பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்திருக்கோயிலுக்கு நன்கொடைகள், காணிக்கைகள் மற்றும் இதர கட்டண வகைகளுக்கு காசோலை மற்றும் வரைவோலை அனுப்ப விரும்புவோர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

முகவரி : **இணை ஆணையர்/செயல் அலுவலர்**

**அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், திருச்செந்தூர் - 628 215.**

**Joint Commiossioner/Executive Officer**
**Arulmigu Subramaniyaswamy Thirukoil, Tiruchendur.**

**திருச்செந்தூருக்கு வருகைதந்து செந்திலாண்டவன் அருள்பெற அன்புடன் அழைக்கின்றோம்.**

**இரா. கண்ணன் ஆதித்தன்** M.S., (USA)
தக்கார்

**பா. பாரதி** பி.எல்.,
இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

இந்த நாட்குறிப்பு புத்தகத்தை தொகுத்து எழுதியவர் :
திருக்கோவில் விதாயகர்த்தா **இரா. சிவராமசுப்பிரமணிய சாஸ்திரி திருச்செந்தூர்**

*With Best Compliments from:*

# VEPPALODAI CHEMICALS



Grams : "SAHAYAM"

FAX : (0461) 2321650

Email : sahayam@md01.vsnl.net.in

☎ 2323301
2321491
2320089
2327600

(Marketers of "SPRINKLE" Iodised Free Flow Salt)

veppalodai Chemicals

13-A/1, Pillaiyar Kovil Street,
Meenakshipuram - West,
TUTICORIN - 628 002.

Arcadian Graphics, Nellai-6. 9443002197, 9843471433

நல்வாழ்த்துக்கள்!

சுகமான வாழ்விற்கு . . .

அயோடைஸ்டு

அயோடைஸ்டு
சுபம்
அயோடைஸ்டு

அயோடைஸ்டு
சுபம்
அயோடைஸ்டு

# சுபம்

பவுடர் சால்ட்

*With Best Compliments from:*

# K.S.P.S. NATARAJAN & CO.,

**SALT MANUFACTURERS & EXPORTERS**

SUBAM IODISED FREE FLOW SALT

Corres, ADD : 13 - A/1, Meenakshipuram West

*TUTICORIN-2*

Telegram : “NATARAJA”

Phone : **2321491, 2320089, 2323301, 2324591**

Factory : **2267208** Fax : **0461 2321650**

email : ksps1928@rediffmail.com

*With Best Compliments from:*

# K.S.P.S. NATARAJAN & CO.,

**SALT MANUFACTURERS & EXPORTERS**

SUBAM IODISED FREE FLOW SALT

Corres, ADD : 13 - A/1, Meenakshipuram West

*TUTICORIN-2*

Telegram : "NATARAJA"
Phone : **2321491, 2320089, 2323301, 2324591**
Factory : **2267208** Fax : **0461 2321650**
email : ksps1928@rediffmail.com

*With Best Compliments from:*

veppolodai Chemicals

Grams : "SAHAYAM"

FAX : (0461) 2321650

Email : sahayam@md01.vsnl.net.in

**(Marketers of "SPRINKLE" Iodised Free Flow Salt)**

13-A/1, Pillaiyar Kovil Street,
Meenakshipuram - West,
TUTICORIN - 628 002.

**2323301**
**2321491**
**2320089**
**2327600**

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

## திருச்செந்தூர்-628 215.

1193 - 1194 ஆண்டு ஹவிளம்பி வருடம் சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் முடிய
(14.4.2018 முதல் 14.4.2019 முடிய தங்கத்தேர் ஓடாத நாட்கள் விபரம்)

| இங்கிலீஷ் தேதி | | | விபரம் |
|---|---|---|---|
| 17–4–2018 | சித்திரை 4 | செவ்வாய் | சித்திரை பரணி சீராளன் உத்ஸவம் |
| 29–4–2018 | 16 | ஞாயிறு | சித்ரா பௌர்ணமி |
| 7–5–2018 | 24 | திங்கள் | சித்திரை ஓணம் |
| 09–5–2018 | 26 | புதன் | அப்பர் ஸ்வாமிகள் குருபூஜை |
| 11–5–2018 | 28 | வெள்ளி | மாதாந்த வெள்ளி |
| 27–5–2018 | வைகாசி 13 | ஞாயிறு | வைகாசி விசாகம் முன்னாள் முதல் |
| முதல் | முதல் | முதல் | முதல் |
| 30–5–2018 | 16 | புதன் | வைகாசி விசாக கலச நீராட்டு முன்னாள் வரை |
| 31–5–2018 | 17 | வியாழன் | திருஞானஸம்பந்தர் குரு பூஜை |
| 8–6–2018 | 25 | வெள்ளி | மாதாந்த வெள்ளி |
| 20–6–2018 | ஆனி 6 | புதன் | ஆனி உத்திரம் |
| 23–6–2018 | 9 | சனி | ஆனி ஸ்வாதி வருஷாபிஷேகம் ஆனி உத்திரம் |
| 13–7–2018 | 29 | வெள்ளி | மாதாந்த வெள்ளி |
| 16–7–2018 | 32 | திங்கள் | ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை |
| 21–7–2018 | ஆடி 5 | சனி | சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூஜை |
| 10–8–2018 | 25 | வெள்ளி | மாதாந்தவெள்ளி |
| 13–8–2018 | 28 | திங்கள் | ஆடிப்பூரம் |
| 25–8–2018 | ஆவணி 9 | சனி | ஆவணி பதினான்கு |
| 28–8–2018 | 12 | செவ்வாய் | ஆவணி உத்ஸவ மண்ணெடுப்பு முதல் |
| முதல் | முதல் | முதல் | முதல் |
| 13–9–2018 | 28 | வியாழன் | கலச நீராட்டு முன்னாள் வரை |
| 14–9–2018 | 29 | வெள்ளி | மாதாந்தவெள்ளி |
| 23–9–2018 | புரட்டாசி 7 | ஞாயிறு | புரட்டாசி பதினான்கு |
| 5–10–2018 | 19 | வெள்ளி | மாதாந்தவெள்ளி |
| 10–10–2018 | 24 | புதன் | நவராத்திரி உத்ஸவம் ஆரம்பம் முதல் |
| முதல் | முதல் | முதல் | முதல் |
| 19–10–2018 | ஐப்பசி 2 | வெள்ளி | விஜய தசமி வரை |
| 2–11–2018 | 16 | வெள்ளி | மாதாந்த வெள்ளி |
| 13–11–2018 | 27 | செவ்வாய் | ஸ்கந்தஷஷ்டியன்று முதல் |
| முதல் | முதல் | முதல் | முதல் |

| இங்கிலீஷ் தேதி | தமிழ்த்தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|---|
| 19–11–2018 | கார்த்திகை 3 | திங்கள் | முதல் ஸோமவாரம் |
| 20–11–2018 | 4 | செவ்வாய் | ஷஷ்டி உத்ஸவகலசநீராட்டு முன்னாள் வரை |
| 26–11–2018 | 10 | திங்கள் | 2 வது ஸோமவாராம் |
| 3–12–2018 | 17 | திங்கள் | 3 வது ஸோமவாரம் |
| 7–12–2018 | 21 | வெள்ளி | மாதாந்த வெள்ளி |
| 10–12–2018 | 24 | திங்கள் | 4வது ஸோமவாரம் |
| 14–12–2018 முதல் | 28 முதல் | வெள்ளி முதல் | திருவெம்பாவை உத்ஸவம் முதல் முதல் |
| 23–12–2018 | மார்கழி 8 | ஞாயிறு | ஆருத்ரா தெரிசனம் வரை (திருவாதிரை) |
| 11–1–2019 | 27 | வெள்ளி | மாதாந்தவெள்ளி |
| 14–1–2019 | 30 | திங்கள் | தனுர்மாத பூஜை நிறைவு |
| 15–1–2019 | தை 1 | செவ்வாய் | தைமாதப்பிறப்பு |
| 16–1–2019 | 2 | புதன் | கனு பரிவேட்டை |
| 20–1–2019 | 6 | ஞாயிறு | ஸ்ரீ ஷண்முகர் 364–வது ஆண்டு விழா |
| 21–1–2019 | 7 | திங்கள் | தைப்பூசம் |
| 25–1–2019 | 11 | வெள்ளி | ப்ரதிஷ்டாவருஷாபிஷேகம் |
| 1–2–2019 | 18 | வெள்ளி | மாதாந்தவெள்ளி எழுந்திருப்பு |
| 8–2–2019 முதல் | 25 முதல் | வெள்ளி முதல் | மாசி உத்ஸவ மண்ணெடுப்பு முதல் முதல் |
| 24–2–2019 | மாசி 12 | ஞாயிறு | மாசி உத்ஸவ கலச நீராட்டு முன்னாள் வரை |
| 08–3–2019 | 24 | வெள்ளி | மாதாந்த வெள்ளி |
| 21–3–2019 முதல் | பங்குனி 7 முதல் | வியாழன் முதல் | பங்குனி உத்திரம் கல்யாணம் முதல் முதல் |
| 26–3–2019 | 12 | செவ்வாய் | மஞ்சள் நீராட்டு வரை |
| 12–4–2019 | 29 | வெள்ளி | மாதாந்த வெள்ளி |

**தங்கத்தேர் ஓடாத நாட்கள் விபரம் சித்திரை முதல் பங்குனி வரை (14.4.2018 முதல் 13.4.2019 வரை)**

**உள்ள விபரங்கள் மாறுதலுக்குட்பட்டது மேலும் தொடர்புக்கு : திருக்கோவில் தொலைபேசி எண் - 04639 242270**

திருச்செந்தூருக்கு வருகை தந்து செந்திலாண்டவன் அருள்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

இத்திருக்கோவில் திருவிழாக் காலங்களில் இன்னிசை கச்சேரிகள், நாதஸ்வர கச்சேரிகள், பக்தி சொற்பொழிவுகள் ஏற்பாடுகள் செய்ய நன்கொடை வழங்குவதற்கு உபயதாரர்கள் அன்புடன் வரவேற்கப்படுகிறார்கள்.

**இரா. கண்ணன் ஆதித்தன்** M.S., (USA)
தக்கார்

**பா. பாரதி** பி.எல்.,
இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி